மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 91/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக் ராஜ் | நாள் | 31.07.2023 |
| தகப்பனார் பெயர் | சந்திர சேகர் | | |

**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

(இவ்வழக்கில் கடந்த 05.03.2020ம் தேதியில் 3ம் பிரதிவாதி மேட்டூர் வட்டாட்சியர் சார்பில் ஓலைப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக 3ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பின்னிட்டு வாதி தரப்பில் திருத்தப்பட்ட வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி திருத்தப்பட்ட வழக்குரையின் பேரில், வாதி தரப்பில் கடந்த 23.03.2021ம் தேதியில் அளிக்கப்பட்ட கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் கடந்த 14.06.2023ம் தேதியில் பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. ஆனால் மேற்படி பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் தவறுதலாக மீண்டும் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களாகவே குறியீடு செய்யப்பட்டுவிட்டதால் தற்போது மேற்படி தவறு கண்டறியப்பட்டு மேற்படி ஆவணங்களின் வரிசை மீண்டும் சீரமைக்கப்பட்டு அவை பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

33) 2006ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் என் தந்தைக்கு ச.எண்.284/4Aல் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். தற்போது இவ்வழக்கில் நான் தடவழி கோரும் ச.எண்.284/2B ஆனது மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கு தொடர்பற்றது என்றால், சரிதான். ஆனால், மேற்படி ச.எண்.284/2Bல் என் தந்தைக்கும், என் சித்தப்பாவிற்கும் தடவழி உரிமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

34) மேற்படி சொத்து என் சித்தப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதா அல்லது கிரயம் பெறப்பட்டதா என்றால், மேற்படி ச.எண்.284/2B ஆனது என் சின்ன

தாத்தாவிடமிருந்து வேறொரு மூன்றாம் தரப்பினர் கிரயம் பெற்று அதற்கு பின் அதை என் சித்தப்பா கிரயம் பெற்றிருந்தார். மேற்படி நிலத்தில்தான் பாகபிரிவினை பத்திரத்தில் என் தந்தைக்கும், என் சித்தப்பாவிற்கும் தடவழி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

35) மேற்படி ச.எண்.284/2B ஆனது பாகபிரிவினை சொத்தான ச.எண்.284/4A ற்கு தெற்கு புறத்தில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி 2006ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் ச.எண்.284/4A நிலம் சரவணன் நிலத்திற்கு வடக்கு என செக்குபந்தி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி 2006ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் சொத்து விவரத்தில், 10 அடி அகலம் 38 அடி நீளமுள்ள வழித்தடத்திற்கு வடக்கு என எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். ஆனால் பொது தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

36) மேற்படி 2006ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் பொது தடம் என குறிப்பிடப்பட்டுள்ள தடம் தற்போது இந்த தாவாவில் நான் கோரியுள்ள தடவழி அல்ல என்றால், சரியல்ல. ச.எண்.284/2B11 ஆனது யாருடைய பெயரில் உள்ளது என்றால், 1ம் பிரதிவாதி சரவணன் பெயரில் உள்ளது. அதேபோல் ச.எண்.284/2B12 ஆனது யாருடைய பெயரில் உள்ளது என்றால், வருவாய் ஆவணங்களில் மேற்படி நிலம் காலி நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறானது என்றும், மேற்படி நிலம் தான் இந்த தடவழி என்றும் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

37) ச.எண்.284/2B12 ல் உள்ள நிலம் நத்தம் புறம்போக்கு நிலமா என்றால், இல்லை. ச.எண்.284/2B11 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் மட்டுமே பட்டா நிலம். மேற்படி ச.எண்.284/2B12 ல் உள்ள 1 சென்ட் நிலம் தான் தாவா வழித்தடம் ஆகும். மேற்படி ச.எண்.284/2B12 ஆனது பட்டா நிலம் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால் மேற்படி ச.எண்.284/2B ல் உள்ள ஒரு பகுதி நிலமானது என் சின்ன தாத்தா கோவிந்தசாமியின் பட்டா நிலம். பின்னிட்டு தான் அது பல்வேறு உட்பிரிவுகளாக செய்யப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்ட

உட்பிரிவுகளில் ஒன்றுதான் ச.எண்.284/2B12 ஆகும். எனவே மேற்படி நிலமும் பட்டா நிலம் தான்.

38) மேற்படி நிலங்கள் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி கோவிந்தசாமி ச.எண்.284/2B ல் உள்ள தனது நிலங்களை விற்பனை செய்தபோது அவரது விற்பனை பத்திரங்கள் எதிலேனும் நான் சொல்வதுபோல் ச.எண்.284/2B12 ல் உள்ள 1 சென்ட் நிலம் தடவழிக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. அப்போது மேற்படி ச.எண்.284/2B ஆனது உட்பிரிவு செய்யப்படவில்லை.

39) ச.எண்.284/2B க்குரிய புல வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றால், ச.எண்.284 க்குதான் தாக்கல் செய்துள்ளேனே தவிர மேற்படி ச.எண்.284/2B க்கு நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

40) நான் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பத்திரத்தின் சொத்து விவரத்திலோ அல்லது பொது சரத்திலோ தாவாவில் கோரியுள்ள தடவழி பாத்தியம் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் பொது சராவில், தாவாவில் நான் குறிப்பிட்டுள்ள அளவுகளுடன் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் தடவழி உள்ளதாக எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால், சரிதான்.

41) மேற்படி 2006 ம் வருடத்திய பாகபிரிவினை பத்திரத்தில் பொது சராவில் என் தகப்பனார் பெயருக்கும், 1 ம் பிரதிவாதியின் பெயருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்ட தடவழி மற்றும் கிணறு பாகங்கள் இருவர் பெயரிலும் கூட்டாக உட்பிரிவு செய்யப்பட்டு, கூட்டுப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது இந்த வழக்கில் நான் கோரும் தடவழிக்கு அவ்வாறு கூட்டுப்பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால், சரிதான்.

42) நான் சொல்வது போல் பாகபிரிவினை பத்திரத்தில் தற்போது இந்த தாவா தடவழியும்,

என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டிருந்தால், மேற்படி தடவழி கூட்டாக உட்பிரிவு செய்யப்பட்டு அதற்கு இருவர் பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு மேற்படி தடவழி கூட்டாக பாத்தியப்படாததால்தான் அதற்கு வருவாய் துறையால் கூட்டுப்பட்டா வழங்கப்படாமல் உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி ச.எண்.284/2B12ல் உள்ள சொத்து 1ம் பிரதிவாதியால் 3ம் நபரிடமிருந்து கிரயம் பெறப்பட்டதால் மேற்படி சொத்திற்கு கூட்டுப்பட்டா வழங்கப்படவில்லை.

43) ச.எண்.284/2Bல் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு மேற்கே 10 அடி தடவழி உள்ளது என்றால், சரிதான். மேற்படி தடவழிக்கும் மேற்கில் மாணிக்கம் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட நிலங்கள் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

44) மேற்படி ச.எண்.284/2Bல் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் வீடுகள் உள்ளது என்றாலும், அதை 1ம் பிரதிவாதி வாடகைக்கு விட்டுள்ளார் என்றாலும், சரிதான். மேற்படி ச.எண்.284/2Bல் உள்ள நிலத்திற்கு கிழக்கே 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஒரு வீடு உள்ளது என்றாலும், மேற்படி வீட்டிற்கு அடுத்தாற்போல் கிழக்குபுறத்தில் வாதியின் தகப்பனாருடைய வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீடுகள் அனைத்தும் சிந்தாமணியூர் செல்லும் பிரதான தார்சாலைக்கு தெற்குபுறத்தில் அமைந்துள்ளது என்றால், மேற்குபுறத்திலும் அமைந்துள்ளது. தெற்குபுறத்திலும் அமைந்துள்ளது.

45) மேற்படி வீடுகள் அனைத்தும் நத்தம் பட்டா நிலங்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. என் தகப்பனாரும், என் சித்தப்பாவும் மேற்படி நிலங்களை 3ம் தரப்பினரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளதால் மேற்படி சங்கதி குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

46) சிந்தாமணியூர் பிரதான சாலைக்கு தெற்குபுறமாக காந்தி சிலை அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி தார்சாலை தெற்குபுறமாக திரும்புவதால் மேற்படி காந்தி

சிலை மேற்குபுறமாகவும் அமைந்துள்ளது. மேற்படி காந்திசிலையிலிருந்து மேற்குபுறமாக ச.எண்.329 ல் சுமார் 5 அடி அளவில் கிழமேலாக ஒரு வழித்தடம் செல்கிறது என்றால், சரிதான். ஆனால் அது சுமார் 7 அடி முதல் 8 அடி வரை அகலம் இருக்கும். அது பொதுப்பாதையாக செல்கிறது.

47) மேற்படி ச.எண்.329 ல் இருந்து செல்லும் தடம் ச.எண்.284/4A ல் செல்கிறது என்றால், சரியல்ல. ச.எண்.284/2B12 ல் சேருகிறது. மேற்படி ச.எண்.329 ல் செல்லும் சாலையானது கிழக்கிலிருந்து மேற்காக சென்று குழந்தை கவுண்டர் வீட்டிற்கு இணைந்து பின்பு வடக்கிலிருந்து தெற்காக சென்று கற்கரையில் முடிகிறது என்றால், சரிதான். மேற்படி கற்கரைக்கு தெற்குபகுதியில் ச.எண்.284/4A ஆனது என் தந்தைக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.